பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 11 2024 **MONDAY** 6 30 **PM**

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. துறைமுகங்கள் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

3. தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. கோவை மெட்ரோ ரயில் திட்டம் தொடர்பாக மத்திய அரசு கோரும் தகவல்களை மாநில அரசு விரைந்து அனுப்ப வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. உலக கிக்பாக்ஸிங் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<

பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, அம்மாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

இம்மாநிலத்தில் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி அரசு மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு அறிவித்த திட்டங்களை ஜார்க்கண்ட் அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்று அவர் குறை கூறினார்.

தேர்தல் நேரத்தில் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அறிவிப்பதை காங்கிரஸ் வாடிக்கையாக கொண்டுள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>><<<<

துறைமுகங்கள் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

சென்னை துறைமுகத்தில் 187 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கடல்சார் வளர்ச்சியில் துறைமுக கட்டமைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

சர்வதேச தரத்திற்கு இணையான, கடல்சார் வர்த்தகத்திற்கு ஏற்ப கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்.

>>>>><<<<

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை கொளத்தூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இளையோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு மாணவர்களுக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்துறை வளர்ச்சியிலும் தமிழகம் முன்னணியில் உள்ளதாக திரு. மு.க.ஸ்டாலின் கூறினார்.

>>>>><<<<

தொழில் நிறுவனங்களை எளிதாக தொடங்குவதற்கான உகந்த சூழ்நிலையை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளதாக சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு கூறியுள்ளார்.

மலேசிய தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மலேசியாவைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள், தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் தமிழக அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. அப்பாவு தெரிவித்தார்.

>>>>><<<<

தமிழகத்தில், முதல்வர் மருந்தகங்களை அமைக்க விரும்புவோர் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

**B.Pharm, D.Pharm** பயின்றவர்கள் அல்லது அவர்களது ஒப்புதலுடன் கூட்டுறவுத்துறை மூலம் அதற்கான இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>><<<<**

அஇஅதிமுக நிர்வாகிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுக்க, காவல்துறை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிவகங்கை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அஇஅதிமுக நிர்வாகிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற தாக்குதல்கள் நடைபெறாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<

கோவை மெட்ரோ ரயில் திட்டம் தொடர்பாக மத்திய அரசு கோரும் தகவல்களை மாநில அரசு விரைந்து அனுப்ப வேண்டும் என்றும் பிஜேபி மகளிர் அணித் தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவையில் விமான நிலைய விரிவாக்கத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளையும் திமுக அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று கோரினார்.

>>>>><<<<

நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்தாமல், தமிழக அரசு நீர் நிலைகளை தனியாருக்கு தாரை வார்க்க துடிப்பது ஏன் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறப்பு திட்டங்களுக்கான நில ஒருங்கிணைப்பு திட்டம் செயல்பாட்டிற்கு வந்திருப்பதாக தமிழக அரசு கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, தனியார் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக திரு. அன்புமணி ராமதாஸ் குறை கூறியுள்ளார்.

>>>>><<<<

தொடக்கப் பள்ளிகளை, நடுநிலைப்பள்ளிகளோடு இணைக்கக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் பூச்சிமருந்துகளை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<

கல்லூரிகளில் போதைப்பொருள் தடுப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாக நெல்லை சரக டிஐஜி திரு. மூர்த்தி கூறியுள்ளார்.

இன்று நெல்லையில் இதுதொடர்பாக நான்கு மாவட்டங்களின் காவல்துறை அதிகாரிகள் மற்றும் கல்லூரி பொறுப்பாளர்கள் பங்கேற்ற

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - மூர்த்தி 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக் கண்ணன் 59 செகண்ட்ஸ்)

>>>>><<<<

மாவட்டச் செய்திகள்

கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்களம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<

மதுரை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. சங்கீதா இன்று வழங்கினார்.

>>>>><<<<

நாமக்கல் மாவட்டத்தில் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாகனங்களின் சேவையை ஆட்சியர் திருமதி. உமா இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

>>>>><<<<

நீலகிரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கென சிறப்பு குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

>>>>><<<<

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி. பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள்மீது, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை

எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கிக்பாக்ஸிங் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆஸ்திரியாவின் **Vienna-**வில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

>>>>><<<<

உலக **Bridge** சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

அர்ஜெண்டினாவில் நடைபெற்ற இப்போட்டியின் குழுப் பிரிவில் தங்கப்பதக்கததையும், சீனியர் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் இந்தியா வென்றது.

>>>>><<<<

சுவிஸ் ஓப்பன் வில்வித்தைப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

21 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் **Gurnoor Singh** வெள்ளிப்பதக்கத்தையும், **Devanah Singh** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**>>>>>END<<<<**